www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022

## Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 6th Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| மனைப்பொருளியல் - II<br>Home Economics - II | Three Hours<br>Gr -13 (2022) | 28 | T | II |

**அறிவுறுத்தல்**

- முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடையளிக்க.

01. i) முட்டையை உணவாக உட்கொள்ளும் ஒருவர் விற்றமின் C உணவைச் சேர்த்து கொள்வது சிறந்தது எனக் கூறப்படுகிறது இதற்கான காரணத்தை தருக.
    ii) உணவுச் சமிபாட்டுத் தொகுதியில் பித்தப்பையின் தொழில் யாது?
    iii) நெசவு செய்யாத துணி என்பதை குறிப்பிடுக.
    iv) தன்னொட்சியேற்றம் நிகழும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
    v) குளிர்முறை உலர்த்தல் செயன்முறையின் பிரதி மூலங்களைத் தருக.
    vi) மின்வழங்கலானது பிரதானமாக இரண்டு வகைப்படும் அவற்றைக் குறிப்பிடுக.
    vii) ஒல்பொட் ஆளுமை பற்றி கூறிய வரைவிலக்கணத்தைத் தருக.
    viii) ஆளுமை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் புறச் சூழல் காரணிகள் 4 தருக.
    ix) விளைதிறனை அதிகரிப்பதில் முக்கியத்துவம் பெறும் ஐந்து அம்ச (5S) எண்ணக்கருவைக் குறிப்பிடுக.
    x) உபகரணங்களுக்காகப் பயன்படுத்தும் மூலப்பொருள்களைத் தெரிவு செய்வதில் கவனிக்க வேண்டிய விடயங்களைத் தருக.

(10x2 = 20 புள்ளி)

02. i) பொதியிடு பொருளாக பொலித்தீன் பயன்பாடு தொடர்பாக விளக்குக.
    ii) போசணை பிரச்சினையைத் தவிர்ப்பதற்குக் கையாளத்தக்க சரியான உணவுப் பழக்கங்களைக் குறிப்பிடுக.
    iii) கனலடுப்பைப் பயன்படுத்தி ஈற்றுணா தயாரிக்கும் போது விசேடமாகப் பின்பற்ற வேண்டிய விடயங்கள் எவை?
    iv) உயர் குருதியமுக்க நோய்க்கு ஆளாகிய ஒருவருக்கு உணவு வேளையைத் திட்டமிடும் போது கவனிக்க வேண்டியவையை குறிப்பிடுக.

(4x4 = 16 புள்ளி)

03. i) உணவு நற்காப்புக் கோட்பாடுகளைக் குறிப்பிடுக.
    ii) ஒட்சியெதிரிகள் பயன்படுத்துவதன் நோக்கத்தைக் குறிப்பிடுக.
    iii) காகித பொதியிடு பொருளை வலுவூட்டும் முறையைக் குறிப்பிடுக.
    iv) a) நவீன சூரிய உலர்த்தியைப் பயன்படுத்தி உலர்த்துவதால் ஏற்படும் நன்மைக எவை?
        b) உணவு நற்காப்புக்காகக் கையாளப்படும் இரசாயன முறையைத் தருக?

(4x4 = 16 புள்ளி)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

04. i) ஒருவரின் பிறப்பின் போது காணப்படும் பரம்பரையலகு சார்ந்த இயல்புகளைக் குறிப்பிடுக.
   ii) மனவெழுச்சியை எவ்வாறு வகைப்படுத்தலாம். எனக் குறிப்பிடுக.
   iii) கட்டிளமைப்பருவத்தினரின் உளத்திறனை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டியவையைக் குறிப்பிடுக.
   iv) உயிரியல் காரணிகள் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன அவற்றைக் குறிப்பிடுக.

(4 x 4 = 16 புள்ளி)

05. i) a) முழுப்புரதம் என்பபதை உதாரணத்துடன் விளக்குக.
      b) கொழுப்பமிலமான ஒமேக்க 3 ஒமேக்க 6 இன் மூலம் உடலுக்கு கிடைக்கும் நன்மை யாது?
   ii) உணவுச்சமிபாட்டுத் தொகுதியை விளக்குக.
   iii) உக்கிரமான குறையீட்டம் காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பிடுக.
   iv) உடலில் சிங்கு (நாகம்) குறைபாடு காரணமாக ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக.

(4 x 4 = 16 புள்ளி)

06. i) ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றை மேற்கொள்ளும் போது பெற்றுக்கொள்ள வேண்டிய தகவல்களைக் குறிப்பிடுக.
   ii) ஆடை உற்பத்தியில் தரம் செவ்வை பார்த்தல் என்பதை விளக்குக.
   iii) மேசைவிரிப்புக்குப் பொருத்தமான துணியைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?
   iv) மேசைக்கு மேசை விரிப்பு விரிப்பதன் நோக்கம் யாது?

(4 x 4 = 16 புள்ளி)

07. i) முயற்சியாண்மையாளரிடம் காணப்படும் பண்புகளைக் குறிப்பிடுக.
   ii) a) முயற்சியாண்மையாளர்களிடத்தே காணப்படும் உந்துதல்களைத் தருக.
      b) வணிக முயற்சியில் விளைதிறன் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு அதன் சமன்பாட்டைத் தருக.
   iii) இயற்கை நார்களில் விலங்கு நார்களைக் குறிப்பிட்டு அதன் மூலப்பொருட்களையும் குறிப்பிடுக.
   iv) செயற்கை நார் உற்பத்தியில் கரைசல் முறை நூற்றலைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைப்பற்றி விளக்குக.

(4 x 4 = 16 புள்ளி)

08. பின்வரும் தலைப்புக்களில் நான்கைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.
   i) நார்ப்பொருள் உள்ள உணவுகளையும் உள்ளெடுக்க வேண்டும் நார்ப்பொருள் என்றால் என்ன என விளக்குக.
   ii) தையல் வகைகளில் மறைப்புத் தையலை விளக்குக.
   iii) உணவு நற்காப்பில் புகையூட்டல் என்பதை விளக்குக.
   iv) உணவு சமைக்கும் போது வெளியேறும் எரிவாயுவின் அளவைக் குறைத்தல் இதனை விளக்குக.
   v) வாயு நிலைக் கழிவுப் பொருள்கள் மூலம் சூழலில் ஏற்படும் தாக்கங்களை விளக்குக.

(4 x 4 = 16 புள்ளி)



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2022

FWC

இந்திய வரலாறு II
Indian History II

Three Hours

Gr -13 (2022)

25 | T | II

## பகுதி II

- முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி B பகுதி C என்பவற்றில் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
  (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்கள் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்)
- முதலாம் வினாவிற்கு இந்திய புறவுருவப்படத்தினைப் பயன்படுத்துக.

## பகுதி A

1) உமக்கு தரப்பட்டுள்ள இந்திய புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள இடங்களைக் குறித்து பெயரிடுக.

1. லோத்தால்
2. பாருகச்ச
3. கைபர் கணவாய்
4. மகா நதி
5. பிரதிஸ்தானம்
6. சுப்பாரக
7. ஆரவல்லி
8. பாடலிபுரம்
9. காவேரிப்பட்டினம்
10. புருஷபுரம்
11. இந்திரபிரதிஸ்தம்
12. மக்ரான்

(12 x 1 = 12புள்ளிகள்)

## பகுதி B

2) ஹரப்பா மக்களது சமய நம்பிக்கைகள் வழிபாட்டு முறைகள் என்பவற்றின் பிரதான அம்சங்களை ஆராய்க. (16 புள்ளிகள்)

3) பிந்திய வேத காலத்து சமூக அரசியல் பொருளாதார நிலைகளில் பிரதான அம்சங்கள் வர்ணிக்குக. (16 புள்ளிகள்)

4) அசோக தர்மர் கொள்கையினை ஆராய்க. (16 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

5) பின்வரும் தலைப்புக்களுக்குள் எவையேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவத்தினை எழுதுக.

i) அர்த்த சாஸ்திரம்

ii) வடமேற்கு எல்லைக் கணவாய்

iii) நந்த வம்சம்

iv) புராதன இந்தியாவின் கண இராச்சியங்கள்

## பகுதி – C

6) சமுத்திர குப்தனின் வாழ்க்கை முழுவதும் படையெடுப்புக்களாகவே அமைந்ததது. அந்த வகையில் குப்தப் பேரரசில் விரிவாக்கத்திற்கு சமுத்திர குப்தனின் பங்களிப்பினை நுணுக்கமாக பரிசீலிக்குக. *(16 புள்ளிகள்)*

7) ஹர்சவர்த்தனின் பின் கனோஜ் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்திய அரசர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களை பரிசீலனை செய்க. *(16 புள்ளிகள்)*

8) அந்நிய தேசங்களில் சோழரின் ஆதிக்கம் படர்ச்சி பரவிய வகையினை பரிசீலனை செய்க. *(16 புள்ளிகள்)*

9) பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

i) இரண்டாம் புலிகேசியில் ஆட்சியில் சாளுக்கிய அதிகாரம் விரிவாக்குக.

ii) பாலர் வம்ச ஆட்சியில் சமய அபிவிருத்தி

iii) சிந்து பிரதேசத்தில் அராபியரில் கைப்பற்றல்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk